# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2090/35 - 2018 සැප්තැම්බර් මස 27 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.09.27

**2090/35 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி, நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு எடம்பிடிய நீர் வழங்கல் செயற்திட்டத்தின் பல்லேகம நீர் சுத்திகரிப்பு அலகிற்கான உட்செல்லும் பாதையை நிர்மாணிப்பதற்காக மற்றும் ஏனைய நிர்மாண நடவடிக்கைகளுக்காக காணிப்பகுதி ஒன்றினை எடுத்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை எடுத்துக் கொள்வதை இக் கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,<br>
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,<br>
இல. 35, லக்திய மெதுர, புதிய பாராளுமன்ற வீதி,<br>
பெலவத்த,<br>
பத்தரமுல்லை.<br>
2018, செத்தெம்பர் 20.<br>
5/2/3/1416.

**அட்டவணை**

பதுளை மாவட்டத்தில், ஹாலியலை பிரதேச செயலாளர் பிரிவில், பல்லேகம கிராம அலுவலர் பிரிவில், பல்லேகம கிராமத்தில் அமைந்துள்ள பல்லேகம வேல்லவெல பிடஹாஎல்லேபதன காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து சுமார் 0.1738 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :

01. **துண்டு இல. 1**

வடக்கு: திரு. யூ. எல். ரணசிங்ஹ அவர்கள் உரிமை கோருகின்ற காணி ; கிழக்கு : திரு. ஆர். எம். உக்குபண்டா அவர்கள் உரிமை கோருகின்ற குறித்த காணியின் மிகுதிப் பகுதி ; தெற்கு : துண்டு இல. 02 ; மேற்கு : வீதிக் காப்பு.




இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :**

1. திரு. ஆர். எம். உக்குபண்டா ரத்னசிரி நிவச, வேல்லவெல, எடம்பிடிய.

*02.* **துண்டு இல. *2***

வடக்கு : துண்டு இல. *01* ; கிழக்கு : திரு. டப்ளியூ. எம். ரணதுங்க அவர்கள் உரிமை கோருகின்ற குறித்த காணியின் மிகுதிப் பகுதி ; தெற்கு : துண்டு இல. *03* ; மேற்கு : வீதிக் காப்பு.

**காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :**

1. திரு. டப்ளியூ. எம். ரணதுங்க, வடபெத்த, வேல்லவெல, எடம்பிடிய.

*03.* **துண்டு இல. *3***

வடக்கு : துண்டு இல. *02* ; கிழக்கு : திரு. லியனகே செனவிரத்ன அவர்கள் உரிமை கோருகின்ற குறித்த காணியின் மிகுதிப் பகுதி ; தெற்கு : திரு. லியனகே செனவிரத்ன அவர்கள் உரிமை கோருகின்ற குறித்த காணியின் மிகுதிப் பகுதி ; மேற்கு : வீதிக் காப்பு.

**காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :**

1. திரு. லியனகே செனவிரத்ன, வேல்லவெல, எடம்பிடிய.

*10 - 353*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.